<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 51/2022 | சாட்சியம் | : | **RW1** |
| **Name** | : | திரு. சுரேஷ்குமார் | | | |
| **Date** | : | **26.11.2024** | | | |
| **Time** | : | **3.30 P.m to 3.35 P.m** | | | |

<u>எ.த.சா.1 திரு.சுரேஷ்குமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும். திரு.சண்முகம் என்பவர் எங்கள் நிறுவனத்தில் ஓட்டுநராக வேலை பார்த்தார் என்றால் ஆமாம் அவருடைய பணி நீக்க உத்தரவை உறுதி செய்வதற்காக நாங்கள் AP.13/2014 செய்திருந்தோம் என்றால் ஆமாம். நாங்கள் தாக்கல் செய்த மேற்படி மனுவானது தொழிலாளர் துணை ஆணையரால் 08.05.2017 அன்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி தள்ளுபடி உத்தரவிற்கு எதிராக மனுதாரர்கள் இந்த CP மனுவை தாக்கல் செய்யும் வரையில் நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஏபி 13/2014 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் போக்குவரத்து கழகம் திரு.சண்முகம் அவர்களுக்கு சரியான முறையில் சம்பளம் வழங்கவில்லை என சொல்லி உள்ளார்கள் என்றால் ஆமாம். அதனை எதிர்த்து தான் நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் திரு.சண்முகம் அவர்கள் 412 நாட்கள் வேலைக்கு வரவில்லை

என சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Writ மனுவில் திரு.சண்முகம் அவர்கள் 259 நாட்கள் பணிக்கு வரவில்லை என சொல்லி உள்ளதால் எது சரி என்றால் அவர் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட தேதி வரை உள்ள வராத நாட்கள் 412 ஆகும். நி.சா.ஆ.5 ல் 12.02.2013 - 30.10.2013 வரை 259 நாட்கள் வரவில்லை என சொல்லி உள்ளோம் என்றால் ஆமாம். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் அதே ஐந்து ஆவணங்களை தான் நாங்கள் தொழிலாளர் துணை ஆணையர் இடமும் தாக்கல் செய்தோம் என்றால் தெரியாது. திரு.சண்முகம் அவர்கள் சமரச அதிகாரி முன் தாக்கல் செய்த பதிலில் அவருக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்த காரணத்தினால் பணிக்கு வர இயலாமல் போனது என தெரிவித்து இருந்தார் என்றாலும் அது சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்களை அவர் ஏபி.13/2014 ல் தாக்கல் செய்திருந்தார் என்றாலும் தெரியாது. மருத்துவ குறிப்புகள் அடங்கிய ஆவணங்களை எங்கள் போக்குவரத்து கழகத்திற்கும் அவர் அனுப்பி வைத்திருந்தார் என்றால் தெரியாது. திரு.சண்முகம் அனுப்பிய மருத்துவ ஆவணங்களை கருத்தில் கொள்ளாமல் அவரை பணிநீக்கம் செய்த காரணத்தினால் தான் ஏபி.13/2014 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தவறு. ஏபி.13/2014 தாக்கல் செய்வதற்கு முகாந்திரம் இல்லை என்ற முடிவுக்கு வந்த காரணத்தினால் தான் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தவறு. தொழிலாளர் துணை ஆணையரிடம் நாங்கள் தாக்கல் செய்த சண்முகத்துக்கு உரிய சம்பள ரசீது முன்னிலைக்கு தான் இந்த மனுவில் சம்பளம் கணக்கீடு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஏபி.13/2014 தள்ளுபடி

செய்யப்பட்ட பின்னர் ஓட்டுநர் திரு சண்முகம் அவர்கள் மூன்று கடிதங்கள் 06.10.2017, 27.07.2018, 11.08.2018 முன்னிலைக்கு எங்கள் போக்குவரத்து கழகத்திடம் மீண்டும் பணி வழங்க கேட்டு கோரிக்கை முன்வைத்தார் என்றால் தெரியாது. மேற்படி கடிதங்களைப் பெற்றுக் கொண்டு போக்குவரத்து கழகம் சார்பில் எந்த பதிலும் தெரிவிக்கப்படவில்லை என்றால் தெரியாது. இறந்து போன திரு சண்முகம் அவர்கள் 30.6.2018 ல் பணி மூப்பு அடைந்து விட்டார் என்றால் ஆமாம். ஏபி.13/2014 தள்ளுபடி செய்யப்பட்டு விட்ட பின்னர் மனுதாரர்களுக்கு அவர்கள் மனுவில் கூறியுள்ள தொகை கிடைக்க தக்கது என்றால் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் கிடைக்க தக்கது அல்ல. இந்த மனு தாக்கல் செய்து மூன்று மாதங்கள் கழித்துதான் மேல்முறையீடு தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். திரு சண்முகம் அவர்களுக்கு கிடைக்க கூடிய தொகை கிடைக்காமல் இருக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்களை அலைகழித்து வருகிறோம் என்றால் தவறு. மனுதாரர்கள் கேட்டுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் அவருக்கு என்ன கிடைக்கக் கூடியதோ அதை வழங்க தயாராக உள்ளோம்.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.11.29 09:44:49 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:26.11.2024